DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயராஜ் | Caste | : |
| Father Name | : செல்வராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.03.2026.**

**PW - 1**

**(1 முதல் 16 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில் மேலகொண்டையம்பேட்டையில் குடியிருக்கிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே எனக்கு தெரியாது. 09.08.2020 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் நான், என் நண்பன் மகேஷ்குமாருடன் இருசக்கர வாகனத்தில், எனது வீடு உள்ள மேலகொண்டையம்பேட்டையிலிருந்து அய்யன்வெட்டி தெரு வழியாக வந்தோம். அப்போது இரவில் சுமார் 40 அல்லது 50 பேர் அய்யன் வெட்டிதெரு பாதாள சாக்கடை கிணறு அருகே அடையாளம் தெரியாமல் என்னையும், மகேஷ்குமாரையும் தாக்கிவிட்டார்கள்.நாங்கள் வந்த TN 48 AB 5416 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் என்ற வாகனத்தையும் அடித்து உடைத்துவிட்டார்கள். எங்களை கட்டையால் தாக்கினார்கள். அதில் எனக்கு தலையிலும், வலது

கையிலும் காயம் ஏற்பட்டது. சாட்சி மகேசுக்கு காயம் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனக்கு மயக்கமாகிவிட்டது. அந்த தெருவில் இருந்த செந்தில்குமார் எங்களை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்பு திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு வந்தோம். அங்கு ஸ்ரீரங்கம் போலிசார் வந்தார்கள். அவர்களிடம் சுமார் 40 அல்லது 50 பேர் அடித்ததாக சொன்னேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் மயக்கத்தில் இருந்தேன். கையொப்பம் மட்டும் போட்டேன். அந்த கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அதசாஆ.1** ஆகும். போலிசார் அடித்தது யார் என்று விசாரித்தார்கள். அடித்தது யார் என்று தெரியாது என்றுதான் சொன்னேன்.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரித்தபோது, நான் மேலகொண்டையம்பேட்டையில் வசிப்பதாகவும், நடு கொண்டையம்பேட்டை பக்கத்து தெரு என்றும் சொன்னேன். எங்கள் தெரு பசங்களுக்கும், நடு கொண்டையம்பேட்டை தெரு பசங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனையிருந்தது என்றும், பேச்சுவார்த்தை இல்லை என்றும் சொன்னால் சரிதான். ஆஜர் எதிரிகள் அனைவரும் நடு கொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. 09.08.2020 அன்று இரவு 10.00 மணிக்கு நானும், மகேசும் சேர்ந்து மகேசின் அப்பாவிற்கு மாத்திரை வாங்க இருசக்கர வாகனத்தில் போனோம். என்னை தாக்கிய நபர்கள் நடுகொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தபோது மேற்படி தேதியில் என்னை ஆஜர்

எதிரிகள்தான் கெட்ட வார்த்தையால் திட்டி, சவுக்கு கட்டானாலும், கைகளாலும் அடித்து தாக்கி கொலை முயற்சி செய்ததாக சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் மகேஷை தாக்கி, என் வண்டியையும் அடித்து சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு, வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.